# <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

## <u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ம் தேதி ( 28/01/2020) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

<u>மன்றபொருள்.1.</u> நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர்.அம்பேத்கார் பேருந்து நிலைய உள்ள ரெஸ்டாரெண்ட் (சைவ உணவகம்) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 07.01.2020 அன்று கோரப்பட்டதில், கீழ்கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொது ஏலம் கோரியவரின் பெயர் மற்றும் முகவரி | உயர்த்தப்பட்ட மறு ஏல பொது ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.ம.கோவிந்தராஜ்,<br>த/பெ.மகாலிங்கம்,<br>நெல்லிக்குப்பம்,<br>பண்ருட்டி வட்டம்.<br>போன் நெம்பர் – . | ரூ.6,400/– |
| 2 | திரு.வெ.ஜெயக்குமார்,<br>த/பெ.வெங்கடபதி,<br>18/35, பாரதியார் தெரு,<br>நெல்லிக்குப்பம்.<br>பண்ருட்டி வட்டம்<br>போன் நெம்பர்– 9944007628. | ரூ.6,500/– |

அலுவலக குறிப்பு : வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் வரிசை எண். 2க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்.468/2006/அ1</u>

**தீர்மான எண் : 005 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள் .2.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி முள்ளிகிராம்பட்டு பெண்ணையாற்றங்கரை 19.01.2020 அன்று ஒரு நாள் மட்டில் நடைபெறும் 1. ஆற்றுதிருவிழாவின்போது வரும் தற்காலிகக் கடைகளுக்கு ஒரு நாள் மட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை 2. ஆற்றுதிருவிழாவின் போது வரும் தற்காலிக வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு ஒரு நாள் மட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு 08.01.2020 பொது ஏலத்தில் கீழ்கண்ட விவரப்படி நபர்களின் ஏலக் கேள்வி விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| ஏலம்தாரர் பெயர் மற்றும் முகவரி ஆற்றுதிருவிழாவின்போது வரும் தற்காலிகக் கடைகளுக்கு ஒரு நாள் மட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | ஏலக் கேள்வி |
|---|---|
| 1. திரு.மு.பாபு த/பெ முருகன்,<br>1, தமிழ் குச்சிப்பாளைம், மேட்டுத் தெரு,<br>நெல்லிக்குப்பம்.<br><br>2. திரு.அ.புதுமைபித்தன் த/பெ அன்பு, | ரூ.1700/– |

| | |
|---|---|
| எண்.7 புது தெரு<br>பெரிய சோழவல்லி, நெல்லிக்குப்பம். | ரூ.1800/— |

| ஏலம்தாரர் பெயர் மற்றும் முகவரி ஆற்றுதிருவிழாவின் போது வரும் தற்காலிக வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு ஒரு நாள் மட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | ஏலக் கேள்வி |
|---|---|
| 1.திரு.மு.பாபு த/பெ முருகன்,<br>1,தமிழ் குச்சிப்பாளைம், மேட்டுத் தெரு, நெல்லிக்குப்பம்.<br><br>2.திரு.அ.புதுமைபித்தன் த/பெ அன்பு,<br>எண்.7 புது தெரு<br>பெரிய சோழவல்லி, நெல்லிக்குப்பம். | ரூ.1700/—<br><br><br><br>ரூ.1800/— |

அலுவலகக் குறிப்பு: **1.** ஆற்றுத்திருவிழாவின்போது வரும் தற்காலிக கடைகள் மற்றும் தற்காலிக வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு ஒரு நாள் மட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு உயர்ந்த ஏலக் கேள்வியாக ரூ.1800/—க்கு திரு.அ.புதுமைபித்தன் என்பவர் கேட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.3713/2019/அ1.

**தீர்மான எண் : 006 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருக்கண்டேஸ்வரம் கிராமம், வார்டு C , பிளாக் 2 T.S.No. 7/1 இடத்தின் பரப்பு **74052** சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திரு .V.A.வேலாயுதம் என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவினை வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண்-R 938/2019 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு **13.12.2019** ல் வரப்பெற்றுள்ளது. பிரண்ட்ஸ் நகர் மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.**100/—** முத்திரை தாளில் தானமாக பெற்றுக் கொள்ளவும், மனுதாரர் கட்டணங்கள் செலுத்தியதும் அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:-</u>

திருக்கண்டேஸ்வரம் கிராமம், வார்டு C , பிளாக் 2 T.S.No. 7/1 பரப்பு **74052** சதுரடி குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் R 938/2019 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.**100/—** முத்திரை தாளில் தானமாக பெற மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மனுதார் கட்டணங்கள் செலுத்தியதும் மனைக்கு வரன்முறை உத்திரவு அளிக்கலாம்.

ந.க.எண்: **3704/2019/F1**

**தீர்மான எண் : 007 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சோழவல்லி கிராமம், வார்டு B, பிளாக் **14** T.S.No. 29/3 , 29/4 உள்ள இடத்தின் பரப்பு **0,54** ஏக்கர். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திரு .கே.ராஜேஸ் என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவினை

வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண்-R 851/2019 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு 09.01.2020 ல் வரப்பெற்றுள்ளது. பிரண்ட்ஸ் நகர் மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.100/— முத்திரை தாளில் தானமாக பெற்றுக் கொள்ளவும், மனுதாரர் கட்டணங்கள் செலுத்தியதும் அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

திருக்கண்டேஸ்வரம் கிராமம், வார்டு B , பிளாக் 14 T.S.No. 29/3 , 29/4 பரப்பு 0,54 ஏக்கர் குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் R 851/2019 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.100/— முத்திரை தாளில் தானமாக பெற மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மனுதார் கட்டணங்கள் செலுத்தியதும் மனைக்கு வரன்முறை உத்திரவு அளிக்கலாம்.

**ந.க.எண்: 061/2020/F1**

**தீர்மான எண் : 008 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள்.5.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு B , பிளாக் 10 , சர்வே எண் . 36/2 வார்டு எண் .3 முள்ளிகிராம்பட்டில் புதியதாக (Power City – 2) , பவர் சிட்டி 2 நகரத்தை மனைகள் ந.க.எண். 2968/2019/எப்1 நாள் . 20.11.2019 வரன்முறைக்கட்டணம் , அபிவிருத்தி கட்டணம் , மனை அனுமதி கட்டணம் , இயற்கை இடர்பாட்டுக்கட்டணம் , நகராட்சி தொகை செலுத்தப்பட்டு உள்ளனர் . எனவே தற்போது காலி மனை வரி “A” ZONE மற்றும் சொத்துவரி “C” ZONE கணினியில் பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் .

**தீர்மான எண் : 009 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள் .6.** 14வது நிதிக்குழு மான்ய நிதி திட்டம் 2019-20ம் ஆண்டின் கீழ் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு ரூ.185.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . நெல்லிக்குப்பம் நகராட்சி மன்ற தீர்மான எண் . 1 நாள் . 03.01.2020 ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , செங்கல்பட்டு அவர்களின் செயல் முறை ந.க.எண். 003/2020/கூ1 நாள். 06.01.2020ல் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி செயல்முறை ந.க.எண். 003/2020/B1 நாள். 07.01.2020ன் படி 28.01.2020 ல் ஒப்பந்தபுள்ளிக்காக 09.01.2020 அன்று மாவட்ட அளவில் தமிழ் நாளிதழ் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் விளம்பரம் செய்த வகையில் (வெ.ஆ.எண்.5/விளம்பரம்/2020/செ.ம.தொ.அ . கடலூர் 08.01.2020) மக்கள் தொடர்பு அலுவலர் , செய்தி மக்கள் தொடர்புதுறை , கடலூர் அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு தீக்கதிர் (THEEKKATHIR) சைதாப்பேட் , சென்னை அவர்களுக்கு ரூ.12000/— நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0039 /2020/இ1)**

**தீர்மான எண் : 010 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள் .7.** தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனையை முன்னிட்டு பொங்கல் சிறப்பு மலர் - 2019 நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 மற்றும் 2019– 20ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூர் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண்.

07/செமதொ/2019 நாள்.08.01.2020ன் படி விளம்பரம் செய்ததில் “மாலைமலர்’’ நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ .10332/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0229/2019/இ1)**

**தீர்மான எண் : 011 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள் .8.** தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனையை முன்னிட்டு “பொங்கல் மலர்’’ - 2019 நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 மற்றும் 2019– 20ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை விளம்பரம் செய்ததில் கீழ் கண்ட நாளிதழ்க்கு விளம்பரத் தொகை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தினத்தந்தி | 15435/– |
| 2 | தினகரன் (Kal publication (p) Ltd) | 16000/– |
| 3 | தமிழ் மரசு (Kal publication (p) Ltd) | 15000/– |

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0228/2019/இ1)**

**தீர்மான எண் : 012 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள் .9.** இந்நகராட்சிக்கு சொந்தமான 40 எண்ணிக்கை கொண்ட டம்பர் பின்களுக்கு 28.01.2020 இன்று ஏலம் கோரப்பட்டது . இதில் இரு நபர்கள் கலந்து கொள் முன் வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளனர் . எனவே ஏலத்தில் கலந்து கொண்ட இரு நபர்களின் விவரங்கன் கிர் கண்டவாறு ..

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரிகள் | கேட்கப்பட்ட எலத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி<br>ஒப்பந்ததாரர் , நெல்லிக்குப்பம் . | 36000/– |
| 2 | திருமதி. எஸ்.பரிமளா.<br>ஒப்பந்ததாரர் , நெல்லிக்குப்பம் . | 37000/– |

மேற்கண்ட வரிசை எண் . 2ல் திருமதி. எஸ்.பரிமளா.ஒப்பந்ததாரர் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி கேட்கபட்டதை மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிறிபபு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2.உயர்ந்தபட்ச ஏலத்தொகை கேட்கப்பட்ட ஒப்பந்ததாரர் திருமதி. எஸ்.பரிமளா , அவர்களுக்கு உடைந்த 40 பின்களை எடுத்து செல்ல பணி உத்திரவு வழங்கலாம் .

**(ந.க.எண் . 0228/2019/எச்1)**

**தீர்மான எண் : 013 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி